10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
அதிர்வு 189 புதன்கிழமை நவம்பர் 29 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



# பிரபாகரன் படத்தை ஏந்தியோர் கைதாவர்



## அரசு எச்சரிக்கை

கொழும்பு, நவ.29

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படங்களைப் பயன்படுத்தி, அவரது பிறந்த தினம் மற்றும் மாவீரர் நாளைக் கடைப்பிடித்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குற்றச்சாட்டை நிரூபிக்க ஏதுவான சான்றுகள் வைத்திருப்பவர்கள் கைது செய்யப்படுவர்"

–இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 06▶

# தமிழினத்தின் விழிப்பே மாவீரர் நாள் எழுச்சி



யாழ்ப்பாணம்,நவ,29

"தமிழினம் விழித்துக் கொண்டிருக்கிறது என்பதையே மாவீரர் தின மக்கள் எழுச்சி காட்டுகின்றது" என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்தம் ஊடகங்களுக்கு வழங்கும் 'கேள்வி-பதில்' மூலம் இதனை அவர் தெரிவித்தார்.

"மக்கள் தங்களை உணரத் தொடங்கிவிட்டார்கள். தங்கள் சக்தியை உணரத் தொடங்கிவிட்டார்கள். தங்கள் உரித்துக்கள் என்ன என்பதையும் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்று கருதுகின்றேன்.

மாவீரர் தின நிகழ்ச்சிகள் 06▶



## வடக்கில் நேற்று முடக்கம்

# இன்றும் இ.போ.ச.இல்லை

யாழ்ப்பாணம், நவ.29

இ.போ.ச பஸ் சேவைகள் அனைத்தும் வடக்கு மாகாணத்தில் நேற்றுக் காலை முதல் முடங்கின. இதனால் பொதுமக்கள், மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின், வடபிராந்திய பிரதான முகாமையாளர் உபாலி கிரிவத்துடுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரி ஆகியோரை வடக்கிலிருந்து உடன் இடமாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 06▶

## சுவிஸ்குமாரைக் காப்பாற்ற அரசு முயலவில்லை



கொழும்பு, நவ.29

புங்குடுதீவு மாணவி வித்யா கூட்டுவன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், பிரதான குற்றவாளியான சுவிஸ்குமாரைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தால் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என நீதி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார். 06▶

## யாழில் ஹெரோயின் விற்றவர்கள் சிக்கினர்




யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவர் நேற்று வசமாகச் சிக்கினர்.

ஓட்டோ ஒன்றில் வைத்து குறித்த சந்தேகநபர்கள் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட போது, அது பற்றிய இரகசியத் தகவல் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்தது. இதனையடுத்து சிவில் 06▶

# ஆயுதமுனையில் 3 வீடுகளில் கொள்ளை

## கலக்கத்தில் கல்வயல்

சாவகச்சேரி,நவ.29

சாவகச்சேரி கல்வயல் சண்முகானந்தா வீதியில் மூன்று வீடுகளில் நேற்று அதிகாலை கொள்ளையர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

மூன்று வீடுகளிலும் முன் கதவு 06▶



# கைது செய்யாமல் காப்பாற்றுங்கள்

கொழும்பு,நவ.29

தம்மைக் கைது செய்வதற்குத் தடை விதிக்கக் கோரி, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச மேல்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை நேற்றுத் தாக்கல் செய்துள்ளார்.

பாதுகாப்புச் செயலராகப் பதவியில் இருந்த 06▶

# இலங்கைச் சிறுவன் கின்னஸ் சாதனை




கொழும்பு,நவ.29

இலங்கையைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுவன், உலகின் இளைய எழுத்தாளராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்துள்ளார்.

நான்கு வயதான தனுவன சேரசிங்க என்ற சிறுவனே இவ்வாறு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தவராவார்.

சீஷெல்ஸ் தீவில் வசிக்கும் இந்தச் சிறுவன் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர். 06▶




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்
பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.
SLT RAINBOW PAGES
Print & Digital Directories
உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்



# அவர்களோடு விலகினால் எங்களோடு இணையலாம்

## பீரிஸ் போடும் நிபந்தனை

கொழும்பு, நவ.29

ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டு அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகிக் கொண்டால் மாத்திரமே, அதனுடன் இணைவது குறித்து ஆலோசிக்க முடியும் என்று மகிந்த அணியைச் சேர்ந்தவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜி.எல்.பீரிஸ் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. எனினும், ஐ.தே.க.வுடனான கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொண்டால் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைய முடியும் என்பதே பிரதான நிபந்தனையாக உள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக பொதுஜன முன்னணி கட்டுப்பணத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளது. அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் நாம் போட்டியிடுவோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)



# அனுமதியின்றி வாய் திறக்காதீர்!

## ரணில் கண்டிப்பு

கொழும்பு, நவ.29

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் அனுமதியின்றி ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கட்சியின், நாடாளுமன்றக் குழுக்கூட்டத்திலேயே மேற்படி அறிவுறுத்தல்களை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்மைக் காலமாக ஐ.தே.கவின் எம்.பிக்கள் ஊடகவியலாளர் சந்திப்புகளில், சுதந்திரக் கட்சியையும், ஜனாதிபதி மைத்திரியையும் கடுமையாக விமர்சித்துக் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இந்தக் கருத்துக்களால் கூட்டாட்சிக்குள் சில குழப்பங்கள் உண்டாகி இருந்தன. அதனையடுத்தே இந்த உத்தரவைப் பிரதமர் ரணில் விடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (அ)

# 9 ஈழ அகதிகள் 'கள்ளத்தோணியில்' நாடு திரும்பினர்

இராமேஸ்வரம், நவ. 29

தமிழகம் தூத்துக்குடி ஈழ அகதிகள் முகாமைச் சேர்ந்த 9 பேர் இராமேஸ்வரத்தில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு சட்டவிரோதமாகத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தமிழக ஊடகமான 'தினமணி' செய்திவெளியிட்டுள்ளது.

'இதுகுறித்து தமிழக உளவுத் துறை அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த முகாம்களில் உள்ள சிலர் தங்களது உறவினர்களைப் பார்க்க இராமேஸ்வரத்தில் இருந்து படகுகள் மூலம் இலங்கைக்குச் சென்றுவிடுகின்றனர்.

இந்த நிலையில், தூத்துக்குடி மாவட்டம் தாப்பாத்தி ஈழத் தமிழர்கள் முகாமில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு தனுஷ்கோடி அரிச்சல்முனையில் இருந்து படகு மூலம் இலங்கை சென்றுள்ளனர்.

இதையடுத்து, குறித்த 9 பேரையும் இலங்கைக்கு அழைத்துச் சென்ற படகு, முகவர்கள் குறித்து உளவுத் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்' என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# வரவேற்பு அமோகம்

கொழும்பு, நவ.29

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை தென்கொரியாவின் தலைநகர் சியோல் நகரைச் சென்றடைந்தார்.

தென்கொரியா நாட்டு ஜனாதிபதி மூன்ஜெனின் அழைப்பை ஏற்று மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதியை அந்நாட்டு உதவி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தலைமையில், இன்சிஜோன் சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது. (அ)

# மின் தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு, நவ.29

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ராகம பகுதியில் மின்சாரம் தாக்கியதில் 40 வயதான நபர் நேற்றுமுன்தினம் பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் அதிவேக நெடுஞ்சாலையில் வேலைசெய்துகொண்டிருந்த ஒருவரே மின்சாரத்தால் தாக்குண்டார். உடனடியாக அவர் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். ஆயினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (அ)

# வர்த்தமானி வழக்கை அவசரமாக விசாரிக்குக!

## சட்டமா அதிபர் மனு

கொழும்பு, நவ.29

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு எதிரான மனுக்களைத் தள்ளுபடி செய்யக் கோரியும், குறித்த மனுக்களை வரும் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கக் கோரியும், சட்டமா அதிபர் தரப்பில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் டிசெம்பர் 5ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களைத் தள்ளுபடி செய்யக் கோரி சட்டமா அதிபர் தரப்பில் நேற்று முன்தினம் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், வரும் டிசெம்பர் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்த வழக்கை, முன்கூட்டியே, வரும் 30 ஆம் திகதி அவசர வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சட்டமா அதிபர் மனுத்தாக்கல் செய்துள்ளார். (அ)

# "நான் தப்பியோடவில்லை"



கொழும்பு, நவ.29

"நான் நாட்டை விட்டு தப்பிச் செல்லவில்லை. அப்படிச் சென்றதாக யாரும் கனவு கண்டால், அதற்கு நான் பொறுப்பாக முடியாது" என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியுடனேயே நான் மோல்டாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தேன். நான் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லவில்லை. மோல்டா நாட்டில் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அமர்வு ஒன்று நடத்தப்பட்டிருந்தது. எதிர்வரும் 2019ஆம் ஆண்டில் இந்த அமர்வுகளை இலங்கையில் நடத்த அனுமதி கோரும் நோக்கில் தான், நான் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தேன். இந்த விஜயமானது எனது தனிப்பட்ட விஜயமல்ல. நான் பிரதமரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவில்லை என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் நான் அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன். ஆகவே பிரதமரிடம் அனுமதி பெறாமல், ஜனாதிபதியிடம் அனுமதி பெற்றேன். என்னை எவரும் பலிக்கடாவாக்க முடியாது. யார் என்ன சொன்னாலும் நான் எனது மனச்சாட்சிக்கு அமையவே செயற்பட்டேன்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# சமரசக் குழுவில் சுமந்திரன்



கொழும்பு, நவ.29

வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக மனுக்களைத் தாக்கல் செய்து, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தடையை ஏற்படுத்தியுள்ள ஆறு மனுதாரர்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்த சபாநாயகர் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ள ஆறு மனுதாரர்களுடனும் பேச்சுக்கள் நடத்தி, இந்த மனுக்களை மீளப்பெற வைப்பதற்கே மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் சட்டமா அதிபர், பிரதமர் உள்ளிட்ட அனைத்துத் தலைவர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (அ)

# அடுத்த மாதம் முதல் பொலித்தீன் வேட்டை

கொழும்பு, நவ.29

பொலித்தீனை உற்பத்தித் தொழிற்சாலைகளில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

"பொலித்தீன் உற்பத்திகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட உள்ளது. 500 பொலித்தீன் உற்பத்தியாளர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் எமது அதிகார சபையின் கீழ் பதிவு செய்து கொள்ளாவிட்டால், தொடர்ந்தும் பொலித்தீன் உற்பத்தியில் ஈடுபட முடியாத நிலை ஏற்படும்" என்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரான பேராசிரியர் லால் தர்மசிறி தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

புதன். 29 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# நியாயம் தானா சொல்லுங்கள்?

இரு மேலதிகாரிகளை இடமாற்றக் கோரி, இ.போ.ச ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்பு இன்றும் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் எந்தத் தரப்பின் பக்கம் நியாயம் உள்ளதெனத் தெரியாவிட்டாலும், உள்ளக முரண்பாடு ஒன்றுக்காக ஒட்டுமொத்த மக்களையும் அவதிப்பட வைப்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது.

வடக்கின் பெரும்பாலான அரச உத்தியோகத்தர்களும், மாணவர்களும் இ.போ.ச சேவையை நம்பியே உள்ளார்கள். பருவகாலச் சீட்டுக்களைப் பயன்படுத்தி தமது அன்றாடத் தேவைகளுக்காக, எப்போதும் இ.போ.ச சேவையை நம்பியிருந்த இவர்களையெல்லாம், 'அம்போ' என விட்டுவிட்டு, "எங்களின் அலுவலகப் பிரச்சினையே முக்கியம்" என ஊழியர்கள் நினைப்பதும், தொடர்ச்சியாக சேவையை நிறுத்துவதும் பலரின் சாபத்தையே பெற்றுக் கொடுக்கும்.

நேற்றைய பணிப்புறக்கணிப்புக்கு மாறாகச் சேவையில் ஈடுபட்ட பருத்தித்துறைச் சாலையைச் சேர்ந்த பஸ்களுக்கு, புறக்கணிப்புக்காரர்கள் பல நெருக்கடிகளைக் கொடுத்து அந்தச் சேவையையும் முடங்க வைத்திருக்கிறார்கள். கல் வீச்சு, சாரதியை அச்சுறுத்துதல் போன்ற வன்முறைகளைப் பிரயோகித்து, தங்கள் புறக்கணிப்புக்கு ஒத்துழைக்குமாறு பணிய வைப்பது எந்தப் போராட்ட நியாயத்துக்குள்ளும் அடங்காது. இது போன்ற அடாத்தான வேலைகள், புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் பக்கமுள்ள நியாயங்களை நீர்த்துப் போகச் செய்துவிடும்.

எதற்கெடுத்தாலும் பணிப்புறக்கணிப்பே ஆயுதம் என்ற நிலை பரவலாக, இ.போ.ச. ஊழியர்களிடம் வேரூன்றி விட்டது. அவர்களிடம் மட்டுமல்ல, பொதுவாகவே இலங்கை முழுவதுமுள்ள சகல அரச, தனியார் ஊழியர்களும் தமக்கேதும் பிரச்சினை என்றவுடன், கண்ணை மூடிக்கொண்டு பணிப்புறக்கணிப்பில் இறங்கிவிடுகின்றனர். மருத்துவர்கள், தாதிகள், ஆசிரியர்கள், ரயில் நிலைய ஊழியர்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் என எல்லோருமே அடிக்கடி பணிப்புறக்கணிப்பை அறிவிக்கிறார்கள். ஆனால் இவர்களில் எவருமே தங்கள் சேவையை நம்பியிருக்கும் பொதுமக்களைக் கிஞ்சித்தும் கணக்கிலெடுப்பதில்லை. மக்களுக்கு அசௌகரியமில்லாமல், தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஏதும் வழியுண்டா எனவும் சிந்திப்பதில்லை.

சிலநாடுகளில் தமக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ள 'வேலை செய்யும் "போராட்டங்களைத் தொழிலாளர்கள் செய்வதுண்டு. ஓய்வு ஒழிச்சலின்றி அவர்கள் பணி செய்வதால், உற்பத்திகள் அதிகரிக்கும் அதேவேளை, "இப்படியான தொழிலாளர்களுக்கு ஏன் உரிய சலுகைகளைச் செய்து கொடுக்கவில்லை?" என்ற கதையாடல் எங்கும் பரவி, அழுத்தம் அதிகரித்து ஒருகட்டத்தில் மேலிடம் தன் நிலையில் இருந்து இறங்கி வரும். இங்கும் அப்படியான போராட்டங்களைச் செய்யலாம். இல்லையேல் மக்களுக்கு பாதிப்பற்ற வகையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி, மேலிடத்தை நெருக்கடிக்குள் தள்ளலாம். உதாரணமாக நேற்றைய பணிப்புறக்கணிப்புக்குப் பதிலாக, அனைத்து பஸ்களையும் இயக்கி, "அதில் பயணிப்பவர்களிடம் எந்தவிதக் கட்டணத்தையும் அறவிட மாட்டோம்" என்ற வடிவத்தை ஊழியர்கள் கையில் எடுத்தால், மேலிடத்துக்குப் பெருத்த நட்டம் ஏற்படும். அதேசமயம் மக்களின் எந்தவொரு செயற்பாடும் பாதிக்கப்படாது. கூடவே மக்களின் ஆதரவும் ஊழியர்களுக்குப் பெருகும்.

மக்களை இம்சிக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகள், நியாயத்தின் தராசில் தாழ்ந்தே நிற்கும். உணர்வார்களா உரியவர்கள்?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பரீட்சைகளை இலகுபடுத்த இனிமேல் புதிய நடைமுறை

கொழும்பு,29

அரச பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களினதும் அடையாளத்தை உரிய முறையில் உறுதி செய்யவும், பரீட்சார்த்திகளின் பரீட்சை நடவடிக்கைளை அதிகாரிகள் இலகுவாக அறிந்து கொள்வதற்காகவும் புதிய நடைமுறையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.



கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் பரீட்சைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைக்க புத்திஜீவிகளைக் கொண்ட குழுவொன்றை நியமித்திருந்தார். இந்தக் குழுவே புதிய ஆலோசனைகளை முன் வைத்துள்ளது.

பாடசாலைக்கு உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் அடையாளத்தை உறுதி செய்யும் இலக்கமொன்றை அறிமுகப்படுத்தவும், அதனுடன் கைவிரல் அடையாளத்தின் மூலம் ஆள் அடையாளத்தை உறுதி செய்து, அதனடிப்படையில் சகல மாணவர்களுக்கும் பிரத்தியேகமாகக் 'கியூ ஆர் குறியீடு' ஒன்றை தயாரிப்பதற்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைமை பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய வெட்டுப்புள்ளி பரீட்சைகளில் பயன்படுத்துவதற்கும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக முக்கிய வெட்டுப்புள்ளி பரீட்சைகளான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சை, கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகளின் போது மாணவர்களின் செயல்திறன் ஆற்றல்களை கண்காணிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பரீட்சை மோசடியை தடுக்கவும் இது பெரும் பயனுள்ளதாக அமையும். இதற்கு மேலதிகமாக விடைமதிப்பீட்டுப் பரிசோதனையின் போதும் செயல்திறன் பரீட்சைக்கும் நவீன தொழில்நுட்பத்துடனான ஓ.சி.ஆர் இயந்திரத்தை கொள்வனவு செய்யவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் செயல்திறன் விடைப்பத்திரத்தை மதிப்பீடு செய்வதற்கான காலம் குறைவடைவதுடன் விரைவாகப் பெறுபேறுகளை வெளியிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




## உள்ளூராட்சித் தேர்தல்
# சாவகச்சேரி நகரசபைக்கு ஈ.பி.டி.பி கட்டுப்பணம்

சாவகச்சேரி, நவ.29

சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான, முதல் கட்சியாக ஈ.பி.டி.பி கட்டுப்பணத்தை நேற்றுச் செலுத்தியது.

யாழ். மாவட்ட தேர்தல்கள் செயலகத்துக்கு நேற்று முற்பகல் 11 மணிக்கு வருகைதந்த, அந்தக் கட்சியின் யாழ்ப்பாண உதவி நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு கட்டுப்பணத்தை ஏற்கும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் டிசெம்பர் 13 ஆம் திகதி வரை இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

வடக்கில் சாவகச்சேரி நகர சபைக்கு மட்டுமே வேட்பு மனுக் கோரப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அதில் போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பி நேற்று முந்திக் கொண்டு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. (அ)

# சிப்பாயைக் கொன்றவருக்கு 2 வருடக் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், நவ.29

பருத்தித்துறையில் சிப்பாய் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த சக சிப்பாய்க்கு 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதி பருத்தித்துறையில் சிப்பாய் ஒருவர் கவனயீனமான முறையில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டார். இதனால் சக சிப்பாய் உயிரிழந்தார். இது குறித்து சட்டமா அதிபரால் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கின் விசாரணையில், குறித்த எதிரியான சிப்பாய் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார். மேலும் வடக்கு கிழக்கு பகுதிகளில் குறித்த இராணுவ சிப்பாய் நீண்டகாலமாக சேவையாற்றியதாகவும், தவறுதலாக துப்பாக்கி வெடித்ததன் காரணமாகவே சக வீரர் உயிரிழந்ததாகவும், திட்டமிட்டு இது செய்யப்படவில்லை எனவும் அவர் சார்பு சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் செய்திருந்தார்.

இவற்றைப் பரிசீலனை செய்த நீதிபதி, குறித்த சிப்பாய்க்கு 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

அத்துடன் 2 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் கட்டத்தவறின் 1 மாத கால கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (அ)

# பஸ் மீது கல் வீச்சு

யாழ்ப்பாணம்,நவ.29

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை டிப்போ பஸ்கள் மீது, நேற்றுக் காலை இனந்தெரியாதோர் கற்கள் வீசித் தாக்குதல்களை மேற்கொண்டதால், பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவைகள், காலை 10.30 மணியுடன் இடைநிறுத்தப்பட்டன. (அ)



## இ.போ.ச ஊழியர்கள்
# 5 பேர் மீது முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.29

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கப் போராட்டத்தை ஒழுங்கமைத்தனர் என 5 பேருக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையப் பொறுப்பாளர் எஸ்.கனகராஜா இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

"வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் சட்டத்துக்கு மாறாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

இதனால் பொதுமக்களின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர்கள் ஐந்து பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று முறைப்பாட்டாளர் கோரியுள்ளார். (அ)

## இன்று நாளும் கோளும்

29.11.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 1 ஆம் நாள்

தசமி மு.ப. 06.06 மணி வரை | ஏகதாசி மு.க. 05.32 மணி வரை | உத்திரட்டாதி பி.ப. 1.30 வரை

இராகுகாலம் 12.00 - 01.30 | சுபநேரம் 10.45 - 11.45 | எமகண்டம் 7.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | பணிவு | இரக்கம் | பெருமை | பிரயாணம் | உதவி | துன்பம் | பகை | சினம் | நோய் | ஆக்கம் | தடங்கல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

புதன், 29 நவம்பர் 2017

## மணியகாரன் தோட்டம் அ.த.க.வில்

# சாதனையாளர்களை கௌரவித்தார் மாவை








வடமராட்சி, நவ.29

அமரர் திருமதி இரத்தினம் கமலா தேவியின் ஞாபகார்த்தமாக புலமைப் பரிசில்கள் வழங்கலும் 'பிரதீபா' விருது பெற்ற சாதனையாளர்களுக்கான கௌர விப்பு நிகழ்வும், மணியகாரன் தோட்டம் பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, சாதனையாளர்களுக்கு பரிசில்களையும் பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

மாகாணசபை உறுப்பினர்களான சிவயோகன் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள். (அ-11)

## அஞ்சல் வாக்காளர்கள் டிசெ.15 க்கு முன் விண்ணப்பிக்குக




கொழும்பு,நவ.29

எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் 93 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் அஞ்சல் மூலம் வாக்களிக்க விரும்பும் வாக்காளர்கள் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஏழு மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகள் உள்ளிட்ட 93 உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்களை நடத்துவதற்கான வேட்புமனுக்கள் அடுத்த மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை கையேற்றப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் நேற்றுமுன்தினம் முதல் இருந்தே அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணத்தை செலுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறுமியோடு சேஷ்டை முதியவருக்கு சிறை



வவுனியா, நவ.29

ஆறு வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முல்லைத்தீவைச் சேர்ந்த 78 வயது முதியவருக்கு ஒரு வருடக் கடூழிய சிறைத்தண்டனையை நேற்று விதித்தது வவுனியா மேல் நீதிமன்றம்.

கடந்த 2013 ஆம் ஆண்டு முல்லைத்தீவைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் தனது பக்கத்து வீட்டில் வசிக்கும் ஆறு வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து, முல்லைத்தீவுப் பொலிஸார் குறித்த முதியவரைக் கைது செய்து, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர். முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற நிலையில், குறித்த முதியவருக்கு எதிராக கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப் பகிர்வுப் பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மேல் நீதிமன்றில் நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தநிலையிலேயே, நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேக நபரான 78 வயது முதியவரை குற்றவாளியாக இனங்கண்டு, ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்ததோடு, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 50 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் எனவும், அதனைச்செலுத்த தவறின் 2 மாத கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும், ஆயிரம் ரூபாய் அபராதமும் அதனைச் செலுத்த தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## முஸ்லிம் அமைச்சர்கள் மகிந்தவுடன் சந்திப்பு



கொழும்பு,நவ.29

நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் பிரபல முஸ்லிம் அமைச்சர்கள் இருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

குறித்த இரு அமைச்சர்களில் ஒருவர் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்பதுடன் முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர். மற்றைய அமைச்சர் அரசாங்கத்தில் ஓர் இராஜாங்க அமைச்சராக செயற்படுபவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைச்சர்கள் தாம் வகிக்கும் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் ஆசனம்பெறுவது தொடர்பிலேயே மகிந்தவுடன் பேசினார்கள் என்று கூறப்படுகின்றது.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அப்ப ஆர் குழப்பிறது?

முந்தநாள் மாவீரர் துயிலுமில்லத்துக்கு விளக்கேத்தப் போனதால உங்களோட நேற்றுக் கதைக்கேலாமல் போட்டுது. அதுக்கு மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

கன நாளாச் சின்னத்துரை வீட்டை போகேல்லை எண்டு நினைச்சுக் கொண்டு படுத்திருக்க வாசல்லை சைக்கிள் பெல் சத்தம் கேட்டுது. பார்த்தால் காதிலை பெரிய செம்பரத்தம் பூ, கையிலை பேப்பர், முதலி படலைக்கை சிரிச்சக் கொண்டு நிக்கிறார். "வாறியே..! முதலி சின்னத்துரை வீடு வரைக்கும் போட்டு வருவம்" எண்டன். வழமையா தோட்டம், துரவு, ஆடு , மாடு எண்டு சாட்டுச் சொல்லுறவன், நேற்றுச் சட்டெண்டு ஓமெண்டிட்டான்.

நான் சைக்கிள்ளை பின்னாலை இருக்க முதலிதான் உழக்கினவன். அப்ப எனக்குப் பழைய ஞாபகம் வந்திட்டுது. அந்தக் காலத்திலை டபிள் போகேலாது. சட்டம் அப்பிடி. முத்தவெளியிலை றீகல் தியேட்டருக்கு இரண்டாம் சோ இங்கிலீஸ் படம் ஒண்டு பாக்கப்போய் திரும்பி வரேக்கை, அப்ப பொலிஸிலை இன்ஸ்பெக்டாரா இருந்த சேனாதி வழியிலை பிடிச்சுச் சில்லின்ரை காத்தைத் துறந்துவிட்டு "இனிப் போங்கோ" எண்டிட்டார். வேறை என்ன? அங்கை நிண்டு பாடிக்கொண்டு நடந்து வந்து வீடு சேரச் சாமமாவிட்டுது. அப்பூட்டை பூசை வாங்கினது தான் மிச்சம். – எண்டு யோசிச்சுக் கொண்டிருந்தன்.

முதலி கேட்டான் என்ன விநாசி அண்ணை சத்தத்தைக் காணேல்லை, உங்காலை திருப்பட்டோ? எண்டு சுடலைப் பக்கத்தைக் காட்டினான். "போடா வம்பா" எண்டு பேசினன், சிரிச்சபடி. "நீ என்ன சின்னத்துரையிலை இருக்கிற பாசத்திலையே அவரை இப்ப பாக்கப் போறாய்? வாய் மடத்தல் கேக்கிது என்ன? எண்டு நக்கலடிச்சான். அவனுக்குத் தெரியும் நல்ல வாய்க்குப் பதமாப் போயிலை போட வேணுமெண்டு நினைச்சா நான் சின்னத்துரை வீட்டை போவன் எண்டு. "டே முதலி. உந்தக் கதையை வந்து சின்னத்தரை வீட்டை கதைக்கப்பிடாது, என்ன? அங்கை வந்து என்னை மானங் கெடுக்கிறேல்லை. சரியே!" எண்டு சாதுவா முதலீட்டைக் கெஞ்சினன் எண்டு வைப்பம்.

சின்னத்துரை வீட்டிலை வழமையா நடக்கிற எல்லா மரியாதையும் நடந்திது. எனக்குத் தந்த மாதிரி முதலிப் பிள்ளைக்கும் ஒரு போயிலை கிடைச்சிது. உடனை முதலி என்னைப் பாத்தும், பாக்காததுமா கொடுப்புக்குள்ளை ஒரு சிரிப்பு. கையை ஓங்கினன். அதுக்கை சின்னத்துரை வந்திட்டான்.

அது சரி விநாசி! முந்தநாள் மாவீரர் கொண்டாட்டத்துக்கு எங்கை போனனி? எண்டு சின்னத்துரை கேக்க, முதலி ஏதோ சொல்ல முந்தினவன். உவன் நான் வீட்டிலை படுத்திருந்த கதையைச் சொல்லிப் போடுவன் எண்ட பயத்திலை, முதலியை ஒரு பார்வை பாத்தன். ஆள் சத்தமில்லாமல் இருந்திட்டான்.

நான் பேப்பரிலை பாத்த, முதலி கான் போனிலை காட்டின எல்லாத்தையும் சேத்து, " மத்தியானம் போலை கோப்பாய்க்குப் போய்ப் பாத்தனான். அனந்தியும், சிவாஜிலிங்கமும் வந்து விளக்கு வைச்சிட்டுப் போட்டினம். ஆமிக்காரர் கனக்க நிண்டபடியால் உடனை திரும்பி வந்திட்டன்." – எண்டு சொல்ல சின்னத்துரை நம்பிவிட்டான்.

பிறகு அவன் தான் வான் ஒண்டு பிடிச்சு எல்லா இடமும் போய் பாத்திட்டு வந்த கதையைச் சொன்னான். போகேக்கை என்னை மறந்து போனானாம். நல்ல காலம் மறந்தது. ஆள் மாவீரர் கொண்டாட்டத்தைப் புளுகு, புளுகு எண்டு புளுகினான். எல்லா இடமும் சனம் வந்து நிண்டு திருப்தியா கொண்டாடினவையாம். எங்கடை ஆக்கள் விளக்கு வைக்க, வேதக்காரர் மெழுகுதிரி ஏத்த உங்காலைப் பக்கம் பாதர்மாரும் பெரிய அளவிலை வந்தவையாம். உந்த விசியத்திலை அவையளைப் பாராட்ட வேணும். எங்கடை ஐயர் மார் பப்ளிக்கா வரப் பயந்தாலும் உவங்கடை முத்தத்திலை தன்னும் ஏதாவது செய்திருப்பினமே?

இந்த முறை உலகம் முழுக்க நடந்திது. கனகபுரத்திலை நடந்ததைப் பற்றித்தான் எல்லாரும் கதைக்கினம். பாட்டும், சனக் கூட்டமும் நல்ல உணர்வு பூர்வமா இருந்திதாம் – எண்டு சின்னத்துரை மாவீரர் தினக் கொண்டாட்டத்தைப் பற்றிக் கன கதையள் சொன்னவன்.

திரும்பி வரேக்கை முதலி கேட்டான் "சின்னத்துரை அண்ணை சொன்ன கதையளிலை ஒண்டைக் கவனிச்சியே? கொண்டாட்டத்துக்கு முன்னமே இந்த முறை மாவீரர் கொண்டாட்டத்தை வைச்சு ஒருவரும் அரசியல் செய்யப்படாது எண்டு சொன்னதாலை எல்லாம் எப்பிடி நடந்திருக்கெண்டு பார். அரசியல் இல்லாமல் கொண்டாட்டம் வடிவாவும், அமைதியாகவும், நல்லாவும் நடந்ததிருக்கெல்லே? அப்ப ஆர் உதெல்லாத்தையும் குழப்பிறது? அதைக் கேட்டால், சொன்னால் எல்லாம் வில்லங்கம்.

**- வில்லங்கம் விநாசி**



# போராட்டத்தை மீறிய பஸ்

## பஸ் நிலையத்தில் வாக்குவாதம்

யாழ்ப்பாணம், நவ.29

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்க நடவடிக்கையை மீறி, பருத்தித்துறை சாலை பஸ் சேவையில் ஈடுபட்டதால், யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதால் இ.போ. ச பஸ் சேவைகள் வடக்கில் முற்றாக முடங்கியிருந்தன. இந்த நிலையில் அதனை மீறும் வகையில் பயணிகளை ஏற்றிக் கொண்டு, 750 ஆம் இலக்க வழித்தட பஸ், யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு வந்தது. இதன்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள் அந்த பஸ்ஸைச் சூழ்ந்து கொண்டு, அதன் சாரதியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரத்தின் பின்னரே நிலைமை சுமுகமானது. (அ)

# வல்வை நகராட்சியின் பரீட்சைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.29

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சிக் கருத்தரங்கினை நடத்தி வருகின்றது. இந்தக் கருத்தரங்கில் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் 5.30 மணி வரை கணித பாடத்துக்கும், நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் 5.30 மணி வரை விஞ்ஞான பாடத்துக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்குகளில் பிரபல ஆசிரியர்கள் வளவாளர்களாகக் கலந்து கொள்வதால், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தவறாது கலந்து பயன்பெறுமாறு நகராட்சி மன்றச் செயலாளர் ச.பிரசாத் கேட்டுள்ளார். (அ-66)

# பிரபஞ்ச அழகிகளில் பதினாறில் ஒருத்தி!

## இலங்கையின் கிறிஸ்டினா சாதித்தார்




லாஸ் வேகாஸ், நவ.29

அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரத்தில் இடம்பெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்குள் நுழைந்த 16 அழகிகளுள் இலங்கைப் பெண் ஒருவரும் இடம்பிடித்துள்ளார்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய கிறிஸ்டினா பீரிஸ் என்பவரே அந்தப் போட்டியில் 16 ஆவது இடத்தை பிடித்தவர்.

லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நிறைவடைந்தது.

இதன்போது பிரபஞ்ச அழகியாகத் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பெண் தெரிவானார். இதன்போதே கிறிஸ்டினா பீரிஸ், இறுதிக்குள் நுழைந்த 16 பேரில் ஒருவராக இடம்பிடித்தார்.

1955ஆம் ஆண்டு பிரபஞ்ச அழகிப் போட்டியில் மூன்றாம் இடத்தை பிடித்த பின்னர் இலங்கை உயர் இடம் ஒன்றைப் பிடித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். 23 வயதான கிறிஸ்டினா, விளம்பர அழகியாக எமிர் நாட்டில் செயற்பட்டு வருகின்றார். போட்டி மூலம் கிடைத்த பணத்தின் ஒரு பகுதியை புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கிறிஸ்டினா செலவிடவுள்ளார். அவரது தாயார், பாட்டி மற்றும் தாத்தா ஆகியோர் புற்று நோயினால் உயிரிழந்தமையாலேயே அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

2017ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரபஞ்சப் போட்டிக்கான இலங்கை அழகிகளில் கிறிஸ்டினா முதல் இடம்பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**29.11.1963**

தியாக தீபம் திலீபனின் பிறந்த தினம்

# சைவப்புலவர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

சுன்னாகம், நவ.29

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப்படும் 2018 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்புபவர்கள், 100 ரூபாவைச் செலுத்தி, விதிகள், பாடத்திட்டத்துடன் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவினை கொக்குவில் தபாற்கந்தோரில் பெறத் தக்கதாக காசுக்கட்டளையை, தலைவர், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் என்னும் பெயருக்குச் செலுத்தி, எதிர்வரும் 31.12.2017 க்கு முன்பாக, 'சைவப்புலவர் மு.திருஞான சம்பந்த பிள்ளை, தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இல. 153, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்' என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது விண்ணப்படிவத்தினையும் கட்டணத்தையும் குறித்த முகவரிக்கு நேரிலும் சமர்ப்பிக்கலாம். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக்கட்டணம் 100 ரூபாவுடன் 31.01.2018 வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குப்பிந்திய விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்தபரீட்சைகள் யாவும் சித்திரை மாதம் இறுதி வாரத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடமாகாண அரச சாரதிகள் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

வடமாகாண அரச சாரதிகள் சங்கத்தின் அனைத்து சாரதிகளுக்குமான பொதுக்கூட்டம் மாங்குளம் மத்திய மகா வித்தியால மண்டபத்தில் எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வடமாகாண சாரதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கஜந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்தோடு குறித்த சங்கத்தில் இதுவரை அங்கத்துவம் பெறாத சாரதிகள் அனைவரையும், தலைவர் கஜந்தன், செயலாளர் சுதாகரன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு அங்கத்துவப் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-11)

# பெண்கள் மீது வன்முறைகள் கண்டித்து அமைதிப் பேரணி




வவுனியா, நவ.29

வவுனியா, கணேசபுரம் பகுதியில் 15 வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதைக் கண்டித்தும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கக் கோரியும் அமைதி ஊர்வலம் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

மகளிர் அபிவிருத்தி வள நிலையம் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன. வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட அமைதி ஊர்வலம் ஏ-9 வீதி வழியாகச் சென்று மாவட்ட செயலகத்தில் முடிவடைந்தது. இதன்போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சோமரத்தின விதான பத்திரனவிடம், குறித்த சிறுமி மீதான் வன்புணர்வுக்கு எதிராகத் துரித நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கக் கோரியும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இவ் ஊர்வலத்தில் மகளிர் அபிவிருத்தி வள நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், வடமாகாணப் பெண்கள் அமைப்பின் இணைப்பாளர் ந.கீதாஞ்சலி மற்றும் பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர். (அ)

# அண்ணன் - தங்கை சடலம் ஆற்றில் சுழியோடிகள் மீட்பு

மஸ்கெலியா, நவ.29

வீட்டு விசேஷத்துக்காக வந்த அண்ணனும், தங்கையும் ஆற்றில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் மஸ்கெலியாவை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

கொழும்பு கனேமுல்ல பகுதியில் உள்ள வியாபார நிலையத்தில் பணிபுரிந்த சுப்பிரமணியம் மகேந்திரன் (வயது 28), பரமேஷ்வரன் மகாலெட்சுமி (வயது 19) ஆகிய மேற்படி அண்ணன், தங்கை இருவரும், தங்கள் இன்னொரு சகோதரியின் பூப்புனித நீராட்டு விழாவுக்காக வீட்டுக்கு வந்தனர். இதன்போது அவர்களின் கைத்தொலைபேசி ஒன்று காணாமல் போயுள்ளது. அது தொடர்பாக அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்க வாகனமொன்றில், நேற்றுமுன்தினம் சென்றனர். ஆனால் திரும்பி வரவில்லை. இதனையடுத்து மோப்ப நாயின் உதவியுடன் பொலிஸார் தேடுதலைத் தொடர்ந்தபோது, மோப்பநாய் ஆற்றுக்குள் சென்றது. இதன் பின்னர் கடற்படைச் சுழியோடிகளால் மாயமான இருவரதும் சடலங்கள் கவரவில ஆற்றில் மீட்கப்பட்டது. (அ)



# அரிய யானையைத் தேடி காட்டுக்குள் சல்லடை

கொழும்பு, நவ.29

அரிய வகை யானையொன்றின் சடலத்தைத் தேடி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தேடுதலில் இறங்கியுள்ளனர்.

குருநாகல் கல்கமுவ பகுதியில் கடந்த 22ஆம் திகதி இளைஞர்களிடம் யானைத் தந்தங்கள் இரண்டு கைப்பற்றப்பட்டன. அவை அரிய வகை யானையினுடையது என ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டது. இளைஞர்களிடம் நடத்திய விசாரணையில், அவர்கள் குறித்த யானை இறந்த நிலையிலேயே அதன் தந்தத்தை எடுத்ததாகக் கூறினர். இதனையடுத்து, அவர்கள் தெரிவித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, குறித்த யானையின் உடலை கண்டுபிடிப்பதற்காக பொலிஸ் குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாக நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் விழிப்புணர்வு நடைபவனி யாழில் இன்று

யாழ்ப்பாணம்,நவ.29

சர்வதேச எய்ட்ஸ் நோய் தடுப்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விழிப்பு ணர்வு நடை பவனி இன்று இடம்பெறவுள்ளது.

இந்த நடைபவனி யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலை முன்பாக இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி, ஹற்றன் நஷனல் வங்கி வீதி, விக்ரோரியா வீதியூடாகச் சென்று, மீண்டும் வைத்திய சாலை வீதியூடாகச் சென்று யாழ்.போதனா வைத்தியசாலை யின் தாதியர் பயிற்சி நெறிக் கல்லூரியில் முடிவடையவுள் ளது. அதனைத் தொடர்ந்து தாதியர் பயிற்சி கல்லூரியில் எய்ட்ஸ் தொடர்பான விழிப் புணர்வு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

“உலகம் முழுவதும் அச்சுறுத்தல் விடுத்துக் கொண்டிருக்கும் நோய்க் காரணியான எச்.ஐ.வி நோய்த் தொற்று இலங்கையிலும் காணப்படு கின்றது. இந்த நோய்த் தொற்றுத் தாக்கமானது வருடத்துக்கு 250 பேர் என்ற கணக்கில் நாட்டில் அதிகரித்துச் செல்வதாக சுகாதாரத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் எச்.ஐ.வி நோய்த் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்தவும், அது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் இந்த நடைபவனி ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது” என்று யாழ். போதனா வைத்தியசாலை யின் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவு மருத்துவ வல்லுநர் பிரியந்த பட்டெகல்ல தெரிவித்தார். (ஆ)

# போர்க் குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுக்கத் தயார்

## கொக்கரிக்கிறார் திலக் மாரப்பன

கொழும்பு,நவ.29

பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் நெசரீபே பிரபுவின் கருத்தை அடிப்படையா கக் கொண்டு போர்க் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கப்படும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிக்கையில், “இலங்கையில் போர்க் குற்றச்செயல்கள் இடம்பெற்றதாகக் கூறப் படும் நிலையில், இந்தக் குற்றச்சாட்டுகளுக் குப் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 40 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழக்கவில்லை எனவும், 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் எனவும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் நெசரீபே பிரபு தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்துக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.இலங்கை தொடர்பில் குற்றம் சுமத்தி வரும் தரப்பினருக்கு நெசரீபே பிரபுவின் கருத்தைப் பதிலடியாகக் கொடுக்க முடியும்” என்றார். (அ)



# முல்லைக் கடலில் மர்மப் படகுகள்

முல்லைத்தீவு,நவ.29

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த சில நாட்களாக மர்மப் படகு களின் நடமாட்டம் காணப்படு வதாக அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரத்தில் மூன்று திசை களில் இருந்து திடீரென வெளிச் சத்தைப் பாய்ச்சியபடி இந்தப் படகு கள் நடமாடுவதால் மீனவர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட் டுள்ளது. சட்டவிரோதப் படகு களே இவ்வாறு அதிக வெளிச்சத் தோடு வந்திருக்கலாம் என்று மீன வர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ள னர்.இது தொடர்பில் நேற்றிரவு இலங்கைக் கடற்படையினருக்கு மீனவர்கள் தகவல் வழங்கிய நிலை யில்கடற்படையினர் அங்கு விரைந்து சென்ற போதும் எந்தவொரு பட கும் பிடிபடவில்லை என்று தெரி விக்கப்பட்டது. (அ)

# தொடர்ச்சிகள்

**சுவிஸ்குமாரை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“சுவிஸ் குமார் தப்பிச் செல்வதற்கு அரசாங்கத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக வெளிவந்த செய்தியில் உண்மை இல்லை. குறித்த கொலையாளி தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கே அரசாங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்திருந்தார்” எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

**இலங்கையைச்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெறும் மூன்றே நாட்களில் “ஜங் பூட்” என்ற ஆங்கிலப் புத்தகத்தை தனுவன சேர சிங்க எழுதியுள்ளார்.

இவர் கற்பதில் திறமையானவர், மிகவும் வேகமாக புத்தகம் வாசிப்பவர். பாலர் பாடசாலையில் சேரும் போதே 7 மொழிக ளில் எழுத கூடியவராக இவர் காணப்பட் டுள்ளார். தற்போது தனுவன சீஷெல்ஸ் விக்டோரியா சர்வதேச பாடசாலையில் 2 ஆம் வகுப்பில் கல்வி கற்று வருகின்றார். (அ)

**இன்றும்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.போ.ச வடபிராந்திய ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை நேற்றுக் காலை ஆரம்பித்தனர்.

இதனாலேயே வடக்கில் இ.போ.ச பஸ் சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டன. இதனால் வடக்கில் உள்ள இ.போ.ச பஸ் நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்பட் டன. யாழ். மத்திய பஸ் நிலையத்தில் அசம் பாவிதங்கள் ஏற்படாதிருக்க பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இ.போ.ச வின் கொழும்புத் தலைமையகத்தில் நேற்று மாலை இடம் பெற்ற பேச்சு வெற்றியளிக்காததால் இன் றும் பணிப்புறக்கணிப்புத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**தமிழினத்தின்...**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துயிலும் இல்லங்களில் மட்டும் நடை பெறவில்லை. கோயில்களில், குடும்ப இல் லங்களில் எல்லாம் தீபச் சுடர் ஏற்றி எமது விடுதலை வீரர்களுக்கு வீர வணக்கம் தெரி வித்துள்ளார்கள் எம் மக்கள். நல்லாட்சி கொண்டுவந்த அரசாங்கத்தால் வல்லாட்சி யின் வசம் திரும்ப முடியாததால் முன்னைய அரசாங்க காலத்தில் இருந்த கெடுபிடிகள் குறைந்திருந்தன.

எமது மாவீரர்களை மலினப்படுத்து வதே மனோநிலை என்றிருந்தால் இவ்வ ளவு எழுச்சியைக் காட்டியிருக்க மாட்டார் கள் எம் மக்கள்.

முன்னைய வருடங்களிலும் பார்க்க உணர்வலை இவ்வருடம் கூடியதற்கான காரணங்கள் இரண்டிருப்பதாகத் தெரிகி றது. ஒன்று உள்ளேயிருந்த உணர்ச்சிகளை இது காறும் எம் மக்கள் தடைபோட்டு வைத்திருந்தார்கள். அவ்வாறு தடை போடத் தேவையில்லை என்றவாறு அரசி யல் நிலைமாற்றம் அடைந்ததும் தமது உணர்ச்சிகளை ஊர் அறிய உலகறிய மக்கள் வெளிக்காட்டியுள்ளார்கள்.

மற்றைய காரணம் எம் மக்களிடையே ஒரு பயம் பிறந்து விட்டது என்று கருது கின்றேன். விடுதலை வீரர்கள் வலம் வந்த காலத்தில் ஈழத்தை விட எல்லாமுந் தரு வோம் என்ற சிங்கள அரசியல்வாதிகள் இன்று சொற்களால் எமக்கு சுகம் தரலாம் என்று எண்ணுவதைப் பார்த்து இவ்வளவு தான் கிடைக்குமா, எமது அபிலாசைகள், அடிப்படை வேண்டுதல்கள் நிறைவேறாதா என்ற பயம் பீடிக்க அன்று இருந்த நிலையை எண்ணி அப்போதைய அதிகாரங்களை எண்ணி அன்றைய விடுதலை வீரர்களை எண்ணித் தமது மரியாதைகளை, மாண்பை தன்னெழுச்சியாகத் தெரிவிக்கத் திரண்ட னர் என்று கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எங்கே எமது தலைவர்கள் விலைபோய் விடுவார்களோ மற்றும் அரைகுறைத் தீர் வைத் தம்மீது திணித்து விடுவார்களோ என்று எண்ணி அஞ்சி விடுதலை வீரர்களின் நினை வேந்தலில் மன நிறைவு காண எத்தனித்துள் ளார்கள். கொள்கைகளில் உறுதியாக இருந்த வர்களின் நினைவில் அமைதி காண எத்தனித் துள்ளார்கள்.

துயிலும் உள்ளங்கள் எமது மக்களுக்குத் துயர் வர விட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது போன்று தோன்றுகின்றது. அச்சுறுத்தல்கள் ஆங்காங்கே இருந்திருப்பி னும் அச்சமின்றி மக்கள் ஒன்று சேர்ந்தமை அரசாங்கத்திற்குத் தலையடி கொடுத்திருக் கிறது. எமது இனம் விழித்துக் கொண்டிருக் கின்றது என்பதற்குத் துயிலும் இல்லத் தொடர் பாடல்கள் கட்டியம் கூறி நிற்கின்றன” என வும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

**பிரபாகரன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

“இதுபோன்ற செயற்பாடுகள் சட்ட விரோதமானவை. பயங்கரவாத விசார ணைப் பிரிவினரால் குறித்த நபர்கள் தொடர் பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன. இந்த விசாரணைகளின் முடிவில் குற்ற வாளிகளாக இனம் காணப்படும் சகலரும் கைது செய்யப்படுவார்கள். பயங்கரவாத அமைப்பொன்றின் தலைவரின் படத்தைப் பகிரங்கமாக எவரும் வைத்திருக்கவோ, அதனை வைத்து அரசியல் செய்யவோ நாம் அனுமதிக்கப்போவதில்லை” என்றும் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார். (அ)

**கைது...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது அரச நிதியை மோசடி செய்து, தமது பெற்றோருக்கு நினைவுச் சின்னம் அமைத்தார் என்ற குற்றச்சாட்டில், கோத்தா பய ராஜபக்சவைக் கைது செய்ய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே, தம்மைக் கைது செய்வதற்குத் தடைவிதிக்குமாறு மேல்முறை யீட்டு நீதிமன்றில் கோத்தாபய ராஜபக்ச மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி கோத்தாபய ராஜ பக்சவைக் கைது செய்வதற்கு திட்டமிடப் பட்டிருந்ததாகவும், ஆயினும் ஜனாதிபதி மைத்திரியின் தலையீட்டினால் அந்த நட வடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

**ஆயுத...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கூரிய ஆயுதம் ஒன்றால் திறந்து உள்ளே புகுந்த கொள்ளையர்கள், அங்கிருந்தவர் களை அச்சுறுத்தியே நகைகளைக் கொள்ளை யடித்துச் சென்றனர்.

கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் கோவில் கணக்காளரின் வீட்டில் 16 பவுண் நகைகளும் மற்றைய இரு வீடுகளிலும் சேர்த்து மொத்தமாக 20 பவுண் நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்களால் கல்வயல் பகுதி யில் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளை யடுத்து மோப்ப நாயின் உதவியுடன் மூன்று வீடுகளிலும் பொலிஸார் சோதனைகளை நேற்று நடத்தினர். (அ)

**யாழில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடையில் சென்ற பொலிஸார் , அவர்க ளைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 60 ஹெரோயின் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், அவற்றின் மொத்த நிறை 2.05கிராம் எனவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 35 மற் றும் 37 வயதுடையவர்கள் எனவும், அவர்க ளிடமிருந்து ஓட்டோ ஒன்றும் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்ட னர். (அ-4)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஷ்யா தாக்குதல் 53 பேர் சாவு!

சிரியா,நவ.29

சிரியாவில் ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் 21 குழந்தைகள் உட்பட 53 பேர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பரிதாப கரமாகப் பலியாகியுள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள நகரங்களை மீட்க சிரிய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு ரஷ்யாவும் உதவி புரிந்து வரும் நிலையில், ஐ.எஸ். தீவிரவாதி களின் இடத்தைத் தாக்கி அழிக்க வான் வழித் தாக்குதல்களை நடத்துகின்றன.

இந்த நிலையில் அல் ஜோர் மாகாணத் தில் உள்ள அல் ஷபா கிராமத்தை மீட்க ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத் தப்பட்டது. இதில் பொதுமக்கள் குடியிருப் பின் மீது நடந்த தாக்குதலில் 21 குழந்தை கள் உட்பட 53 பேர் கொல்லப்பட்டதாக சிரியா மனித உரிமைகளுக்கான ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. 2011ஆம் ஆண்டு முதல் சிரியாவில் உள்நாட்டுப் போர் நடந்து வரு வது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# தள்ளிப்போனது 'கொடிவீரன்'



சென்னை,நவ.29

முத்தையா இயக்கத்தில் சசிகுமார் - மகிமா நம்பியார், பூர்ணா, சனுஷா, விதார்த் நடிப்பில் உருவாகி இருக்கும் 'கொடிவீரன்' படத்தின் வெளியீட்டுத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

'குட்டிப்புலி' படத்துக்குப் பிறகு முத் தையா - சசிகுமார் இணைந்திருக்கும் படம் 'கொடிவீரன்'. காதல், சென்டிமென்ட், கோபம் என கொமர்ஷியல் படமாக உரு வாகியிருக்கும் இந்தப் படத்தில் சசிகுமா ருடன் மகிமா நம்பியார், பூர்ணா, சனுஷா, விதார்த், பால சரவணன் உள்ளிட்ட பல ரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார் கள். இதில் ஒரு முக்கியமான வில்லத்த னம் கலந்த வேடத்தில் பசுபதி நடித்திருக் கிறார்.

படம் நாளை வியாழக்கிழமை வெளி யாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட் டிருந்த நிலையில், படத்தின் வெளியீட்டுத் திகதி தற்போது தள்ளிவைக்கப்பட்டுள் ளது. அதன்படி படம் எதிர்வரும் 7ஆம் திகதி வெளியாகவுள்ளது. (ஒ)

# பெங்களூர் பெண்ணுக்கு நீதிமன்றம் அறிவுரை



சென்னை,நவ.29

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மகள் என உரிமை கோரி பெங்களூர் பெண் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த விவகாரத்தில் கர்நாடக உயர் நீதி மன்றத்தை அணுகுமாறு அம்ருதாவுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுரை கூறியுள்ளது.


பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்பவர் உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுத் தாக்கல் செய்திருந்தார். அதில், "கடந்த 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் திகதி ஜெயலலிதாவின் மகளாக பெங்களூரில் பிறந்தேன். ஜெயலலிதாவின் அத்தையான ஜெயலட்சுமிதான் பிரசவம் பார்த்தார். எனக்கு அம்ருதா எனப் பெயர் சூட்டி னார். என்னை மஞ்சுளா எனவும் அழைப் பார்கள்.

ஜெயலலிதாவின் உண்மையான மக ளான என்னை, அவரது இரத்த வாரிசாக அறிவிக்க வேண்டும். இதில் சந்தேகம் இருந்தால் ஜெயலலிதாவின் உடலைத் தோண்டியெடுத்து டி.என்.ஏ மரபணுச் சோதனை நடத்த உத்தரவிட வேண்டும். அதற்கு நான் தயாராக இருக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், "அரசியல் சாசனப் பிரிவு 32 இன் படி, தத்துக் கொடுக்கப்பட்ட பிள் ளைகள் தங்களது உண்மையான பெற்றோ ரின் இரத்த வாரிசு உரிமையைக் கோரலாம். இதேபோல 21ஆம் பிரிவு, நாட்டின் குடி மகனுக்குத் தனது உண்மையான அடையா ளத்தை அறிந்துகொள்ளும் உரிமை இருக் கிறது.

எனவே, கர்நாடக உயர் நீதிமன்றத்தை அணுகி, உங்களது கோரிக்கையை முறையி டலாம்" எனக்கூறி, அம்ருதாவின் மனுவைத் தள்ளுபடி செய்தனர்.

இதனால் அம்ருதா விரைவில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய் வார் எனத் தெரிகிறது. (ஒ)



# தாயாக விரும்பும் ரோபோ

சவுதி அரேபியா,நவ.29

உலகில் முதன்முதலில், குடியுரிமை பெற்ற ரோபோவான சவுதி அரேபியாவின் சோபியா ரோபோ, குழந்தை பெற்றுக்கொள்ள விரும் புவதாகத் தெரிவித்துள்ளது.

கலீஜ் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பேசியுள்ள சோபியா ரோபோ, "குடும்பம் என்ற கருத்து மிக முக்கியமான விஷயமாகத் தெரிகிறது. சொந்த இரத்த வகையைத் தாண்டியும், மக்களால் தங்க ளுக்கு ஒத்த உணர்வுகளைக் கொண்ட சொந் தங்களைக் குடும்பம் என்று அழைக்க முடி வது என்பது மிகவும் அற்புதமான ஒன்று.

உங்களுக்குப் பாசமான குடும்பம் இருந் தால், நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. அவ் வாறு இல்லை என்றால், அத்தகைய குடும்பத் தைப் பெறும் தகுதி உங்களுக்கு உள்ளது. இந்த விஷயத்தில், மனிதர்களும், ரோபோக் களும் ஒரே மாதிரியானவர்கள் என்றே நான் நினைக்கிறேன். எனது குழந்தைக்கு சோபியா என்று பெயர் வைப்பேன்" என்று தெரிவித் துள்ளது. (எ)

# 2.0 படத்தை இப்படியும் பார்க்கலாம்




சென்னை,நவ.29

400 கோடி ரூபா செலவில் சங்கர் இயக்க, ரஜினி நடித்துள்ள 2.0 படம் அடுத்த வரு டம் வெளியாகவுள்ளது.

இந்தப் படம் வெளியான 25 நாட்க ளில் நீங்களும் வீடியோ ஸ்ட்ரீமிங் மூலம் பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

படங்களை டிஜிட்டல் முறையில் வெளி யிடும் அமேசான் பிரைம் நிறுவனம் தற் போது 2.0 படத்தின் உரிமத்தைப் பெற் றுள்ளது. இந்தத் தகவலைப் படத் தயாரிப் பாளர் அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே அதே நிறுவனம் தீரன் அதிகாரம் ஒன்று, துப்பறிவாளன், கபாலி, தெறி, வேலையில்லா பட்டதாரி 2, சி 3, மாநகரம், துருவங்கள் 16, காற்று வெளி யிடை, காஷ்மோரா, ஜோக்கர் எனப் பல படங்களின் உரிமையையும் பெற்றுள்ளது. (ஒ)

# சவுதி இளவரசி காலமானார்

சவுதி அரேபியா,நவ.29

சவுதி அரேபிய இளவரசி காலமானதாக அங்குள்ள அரச குடும்பத்தினர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளனர்.

இளவரசி மடவா பிந்த் அப்துல்ஜிஸ் அல் சவுத் உடல் நலக் குறைவால் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளதாகச் சவுதி அரச குடும் பத்தினர் வெளியிட்ட அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. இறுதிச்சடங்குகள் தொடர்பான நிகழ்வுகள் மக்காவில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (எ)

# கொரிய தீப கற்பத்தில் பதற்றம்: அமெரிக்காவைச் சாடுகிறது ரஷ்யா

ரஷ்யா,நவ.29

கொரிய தீபகற்ப பதற்றத்துக்கு அமெ ரிக்காவே காரணம் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

வடகொரியா கடந்த செப்ரெம்பர் 3ஆம் திகதி ஹைட்ரஜன் குண்டு சோத னையை நடத்தியது. இதைத் தொடர்ந்து கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுக ணைகளையும் சோதனை செய்தது.

இதற்குப் பதிலடியாக அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை ஐ.நா. சபை விதித்தது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து போர் ஒத்திகையில் ஈடுபடுகின்றன.

இந்தப் பின்னணியில் தென்கொரியத் தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் நடந்த கருத்தரங்கில் ரஷ்ய வெளியுறவுத் துணை அமைச்சர் இகோர் மோர்குலோவ் பங்கேற்றுப் பேசிய போது,

"வடகொரியா அணு ஆயுதச் சோதனை களை நடத்தக் கூடாது என்று ரஷ்யா கண் டித்துள்ளது. கடந்த 2 மாதங்களாக வட கொரியா எவ்வித அசாதாரண நடவடிக்கை களிலும் ஈடுபடவில்லை. அதேவேளை அமெ ரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பதற் றத்தை அதிகரிக்கும் வகையில் போர் ஒத் திகைகளில் ஈடுபட்டு வருகின்றன. வட கொரியாவுடனான அமைதிப் பேச்சுவார்த் தைக்குத் தென்கொரியா தயாராக உள்ளது.

ஆனால் அமெரிக்காவின் பிடிவாதத் தால் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. கொரிய தீபகற்பத் தில் பதற்றம் நீடிப்பதற்கு அமெரிக்காவே காரணம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ரஷ்யத் தரப்பில் அமைதித் திட்டம் முன் மொழியப்பட்டுள்ளது. இதற்கு அமெரிக்கா இன்னமும் பதில் அளிக்கவில்லை. இந்த விவகாரத்தில் ரஷ்யா கண்ணை மூடிக் கொண்டிருக்காது" எனத் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் கண்காட்சி



யாழ்ப்பாணம், நவ.29

'சுயதொழிலில் பெண்கள்' நிறுவனத்தின் வருடாந்த பொது கூட்டமும் கண்காட்சி நிகழ்வும் அச்சுவேலி கலாமினி திருமண மண்டபத்தில் நேற்று மாலை 03.30 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வின் விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகம், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், கோப்பாய் பிரதேச செயலாளர், அச்சுவேலி பொலிஸ் நிலைய அதிகாரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ப்ரெண்ட்ஸ் நிறுவனத்தின் அனுசரணையோடு பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பை ஏற்படுத்தும் நோக்கில் சுயதொழிலில் பெண்கள் நிறுவனம் செயற்படுவதாக அதன் தலைவி எஸ்.அமுதா நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

350 அங்கத்தவர்களைக் கொண்ட தமது அமைப்பின் அங்கத்தவர்களுக்கு பல்வேறு சேவைகளை அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# தமிழ்க் கூட்டமைப்போடு ஐ.தே.க. இணைய வேண்டும்

## மகிந்தவின் ஆசை இது



கொழும்பு,நவ.29

"ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து எப்படி ஆட்சியமைப்பார்கள் என்பதைப் பார்க்க ஆவலாக இருக்கிறது" என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளார்.

"அப்படி ஒரு நிலைமை வந்தால் எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எப்படிக் காப்பாற்றுவது என்பதும் எங்களுக்கும் தெரியும். செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்போது திருட்டுமுழி முழித்துக்கொண்டிருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. அவர்களால் இனி மீளவே முடியாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# கடற்படை முகாமின் முன்னே ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, நவ.29

வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் முன்பாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் அமைப்பினர் நேற்று மாலை ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்திய இழுவைப் படகுகளின் வருகையை வட்டுவாகல் கடற்படையினர் கட்டுப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாகப் படகுகளில் வந்து தொழில் செய்வதினால் தமது கடற்தொழில் பாதிக்கப்படுவதாக ஆர்ப்பாட்டகாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். கஞ்சா போன்ற போதைப் பொருட்களும் இந்தப் பகுதிக்குள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர்கள் கவலை வெளியீட்டுள்ளனர். இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் இருவரை கடற்படை முகாமின் பொறுப்பதிகாரி சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் பின்னர் நேற்றிரவு தொடக்கம் கடற்படையினர் நேரடி ரோந்து நடவடிக்கையை கடலில் தீவிரப்படுத்துவதாக உறுதிமொழியைக் கடற்படையினர் வழங்கியதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (அ)

# அஸ்வினைப் புகழும் முரளி







கொழும்பு,நவ.29

தற்போதைய சூழலில் அஸ்வின் தான் உலகின் முதற்தர சுழற்பந்து வீச்சாளர் என இலங்கையின் முன்னாள் சுழல் சூறாவளி முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக நாக்பூரில் நடைபெற்ற 2 ஆவது டெஸ்ட்டில், 8 விக்கெட்டுகள் வீழ்த்தியதன் மூலமாக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் விரைவாக 300 விக்கெட்டுகள் வீழ்த்திய பந்து வீச்சாளர் என்னும் சாதனையை அஸ்வின் படைத்தார். அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் லில்லியே இதற்கு முன்பு இந்த சாதனையைப் படைத்திருந்தார். அவரின் சாதனையைஅஸ்வின் முறியடித் தமக்கு, கிரிக்கெட் வீரர்கள் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனும் அஸ்வினுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

"தற்போது அஸ்வினே உலகின் சிறந்த சுழற்பந்து வீச்சாளர், ஒருநாள் போட்டிகளில் தற்போது அவர் இடம்பெறவில்லை. எனினும், விரைவில் ஒருநாள் போட்டிகளில் இடம்பெற்று பல ஆச்சரியங்களைப் புரிவார் என்று நம்புகிறேன்" என்றார் முரளிதரன். (அ)

# அணியிலிருந்து கழற்றப்பட்டார் ஹேரத்

கொழும்பு,நவ.29

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத், இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாட மாட்டார் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இவருக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் ஜெஃப்ரி வாண்டர்சே முதல்முறையாக டெஸ்ட் போட்டியில் அறிமுகமாக உள்ளார். முதல் டெஸ்ட்டில் 8 ஓவர்கள் வீசிய ஹேரத், இரண்டாவது டெஸ்ட்டில் 39 ஓவர்கள் வீசி ஒரு விக்கெட்டை மட்டுமே எடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)







# வைரவிழாக் கிண்ணம் கிங் ஸ்ரார் கைகளில்

யாழ்ப்பாணம், நவ.29

குபேரகா நாடக மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கரப்பந்தாட்டத்தில் கோண்டாவில் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் வைரவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட ஓவர்கேம் முறையிலான இந்தக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இந்த இறுதிப்போட்டியில் கோண்டாவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், உடுவில் அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் அசத்தலாக விளையாடிய கிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 34:24 என்ற புள்ளிகளைப் பெ ற்று வைரவிழாக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக கிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தாஸ் தெரிவு செய்யப்பட்டார். (அ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 29.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.